# MANIDHANAEYAM FREE IAS ACADEMY – TNPSC GROUP – II & IIA PRELIMINARY EXAM

## பொதுத்தமிழ்-பகுதி-அ-இலக்கணம்

## அலகு - 14

## பெயர்ச்சொல்லின் வகையறிதல்

### இடைச்சொல் – உரிச்சொல்

சுசீலா, அவளுடைய தோழி கமீலாவின் வீட்டுக்குப் போனாள். கமீலாவும் சுல்தானும் தொலைக் காட்சி நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருந்தனர். சுல்தானைவிடக் கமீலா இரண்டு ஆண்டுகள் பெரியவள். ஆனால் உருவத்தில் சுல்தான்தான் அண்ணனைப் போல இருப்பான். சுசீலாவைக் கண்டவுடன் கமீலா மகிழ்ச்சியடைந்தாள்.

மேற்கண்ட பகுதியில் இடைச் சொற்களை இனம் காண முடிகிறதா?

இன், கு, உடைய, உம், ஐ, விட, கள், ஆனால், தான், போல, உடன் போன்றவை இடைச் சொற்கள்.

பெயர்ச் சொற்கள், வினைச் சொற்கள் ஆகியவற்றைப்போல இடைச்சொற்கள் தமிழில் மிகுதியாக இல்லை. ஆயினும், இடைச் சொற்களே மொழிப் பயன்பாட்டை முழுமையாக்குகின்றன.

இடைச் சொற்கள், பெயரையும், வினையையும் சார்ந்து இயங்கும் இயல்பை உடையன; தாமாகத் தனித்து இயங்கும் இயல்பை உடையன அல்ல என்கிறார் தொல்காப்பியர்.

இடைச்சொல் பலவகையாக அமையும்.

### இடைச்சொற்களின் வகைகள்

| | |
|---|---|
| வேற்றுமை உருபுகள் | ஐ, ஆல், கு, இன், அது, கண் |
| பன்மை விகுதிகள் | கள், மார் |
| திணை, பால் விகுதிகள் | ஏன், ஓம், ஆய், ஈர்(கள்), ஆன், ஆள், ஆர், ஆர்கள், து, அ |

| | |
|---|---|
| கால இடைநிலைகள் | கிறு, கின்று,… |
| பெயரெச்ச, வினையெச்ச விகுதிகள் | அ, உ, இ, மல்,… |
| எதிர்மறை இடைநிலைகள் | ஆ, அல், இல் |
| தொழிற்பெயர் விகுதிகள் | தல், அம், மை |
| வியங்கோள் விகுதிகள் | க, இய |
| சாரியைகள் | அத்து, அற்று, அம்,… |
| உவம உருபுகள் | போல, மாதிரி |
| இணைப்பிடைச் சொற்கள் | உம், அல்லது, இல்லையென்றால், ஆனால், ஓ, ஆகவே, ஆயினும், எனினும்,… |
| தத்தம் பொருள் உணர்த்தும் இடைச் சொற்கள் | உம், ஓ, ஏ, தான், மட்டும், ஆவது, கூட, ஆ, ஆம் |
| சொல்லுருபுகள் | மூலம், கொண்டு, இருந்து, பற்றி, வரை |
| வினா உருபுகள் | ஆ, ஓ |

இவற்றுள் உம், ஓ, ஏ, தான், மட்டும், ஆவது, கூட, ஆ, ஆம் ஆகிய இடைச்சொற்கள் தற்காலத் தமிழில் மிகுதியாகப் பயன்படுத்தப்படுகின்றன.

**உம்**

'உம்' என்னும் இடைச்சொல் எதிர்மறை, சிறப்பு, ஐயம், எச்சம், முற்று, அளவை, தெரிநிலை, ஆக்கம் என்னும் பொருள்களில் வரும்.

மழை பெய்தும் புழுக்கம் குறையவில்லை. (எதிர்மறை உம்மை)

பாடகர்களும் போற்றும் பாடகர். (உயர்வு சிறப்பு)

**ஓ**

ஓகார இடைச்சொல் ஒழியிசை, வினா, சிறப்பு (உயர்வு, இழிவு), எதிர்மறை, தெரிநிலை, கழிவு, பிரிநிலை, அசைநிலை ஆகிய எட்டுப் பொருளில் வரும் என்று நன்னூல் கூறுகிறது.

தற்காலத்தில் ஓகார இடைச்சொல் பிரிநிலைப் பொருளில் அதிகமாக வருகின்றது. அதைத் தவிர ஐயம், உறுதியாகக் கூறமுடியாமை, மிகை, இது அல்லது அது, இதுவும் இல்லை – அதுவும் இல்லை போன்ற பொருள்களிலும் வருகின்றன.

- இன்றைக்கு மழை பெய்யுமோ? (ஐயம்)
- பூங்கொடியோ மலர்க்கொடியோ பேசுங்கள். (இது அல்லது அது)
- பாலுவோ கண்ணனோ பேசாதீர்கள். (இதுவும் இல்லை – அதுவும் இல்லை)

**ஏ**

ஏகார இடைச்சொல் பிரிநிலை, வினா, எண், ஈற்றசை, தேற்றம், இசைநிறை ஆகிய ஆறு பொருள்களில் வரும் என்று நன்னூல் குறிப்பிடுகின்றது.

தற்காலத்தில் ஏகாரம் தேற்றப் பொருளில் (அழுத்தம்) மட்டுமே வருகிறது.

அண்ணல் காந்தி அன்றே சொன்னார்.

நடந்தே வந்தான்.

**தான்**

'தான்' என்னும் இடைச்சொல்லும் அழுத்தப் பொருளில்தான் வருகின்றது. சொற்றொடரில் எந்தச் சொல்லுடன் வருகிறதோ, அதனை முதன்மைப்படுத்துகின்றது. ஒரு சொற்றொடரில் ஒருமுறை மட்டுமே வருகிறது.

நிர்மலாதான் நேற்று விழாவில் பாடினாள்.

நிர்மலா நேற்றுதான் விழாவில் பாடினாள்.

நிர்மலா நேற்று விழாவில்தான் பாடினாள்.

நிர்மலா நேற்று விழாவில் பாடினாள்தான்.

வேறுபாட்டை உணருங்கள்:

நிர்மலாதான் பாடினாள். (தான் – இடைச்சொல்)

நிர்மலா தானும் பாடினாள். (தான் – தற்சுட்டுப் படர்க்கை ஒருமை இடப்பெயர் – பெயர்ச்சொல்)

**மட்டும்**

இச்சொல் வரையறைப் பொருள் தருகிறது. முடிந்தவரை, குறிப்பிட்ட நேரம் வரை என்னும் பொருள்களிலும் வருகிறது.

படிப்பு மட்டும் இருந்தால் போதும். (வரையறைப் பொருள்)

**ஆவது**

இது பல பொருள்களில் வரும் இடைச்சொல்லாகும்.

- ஐந்து பேராவது வாருங்கள். (குறைந்த அளவு)
- அவனாவது, இவனாவது செய் து முடிக்கவேண்டும். (இது அல்லது அது) முதலாவது, இரண்டாவது,.... (வரிசைப்படுத்தல்)

**கூட**

- என்னிடம் ஒரு காசுகூட இல்லை. (குறைந்தபட்சம்)
- தெருவில் ஒருவர்கூட நடமாடவில்லை. (முற்றுப் பொருள்)
- அவனுக்கு வரையக்கூடத் தெரியும். (எச்சம் தழுவிய கூற்று)

**ஆ**

வினாப் பொருளில் வரும் இடைச் சொல்லாகும்.

ஆ என்னும் இடைச்சொல், சொற்றொடரில் எந்தச் சொல்லுடன் இணைந்து வருகிறதோ, அச்சொல் வினாவாகிறது.

புகழேந்தி நேற்று உன்னுடன் பேசினானா?

புகழேந்தி நேற்று உன்னுடனா பேசினான்?

**ஆம்**

சொற்றொடரின் இறுதியில் வந்து இசைவு, சாத்தியம், பொருத்தம் ஆகிய பொருள்களிலும், தகவலாகவும், வதந்தியாகவும் செய்தியைக் கூறுவதற்கும் பயன்படுகிறது.

உள்ளே வரலாம். (இசைவு)

இனியன் தலை நகர் போகி றானாம் . (தகவல்)/செய்தி

பறக்கும் தட்டு நேற்றுப் பறந்ததாம். (வதந்தி)/பொய்மொழி

**உரிச்சொற்கள்**

உரிச்சொற்கள் பெயர்களை யும் வினைகளையும் சார்ந்து வந்து பொருள் உணர்த்துகின்றன. உரிச்சொல் இசை, குறிப்பு, பண்பு என்னும் பொருள்களுக்கு உரியதாய் வரும். உரிச்சொற்கள் ஒவ்வொன்றும் தனித்த பொருள் உடையவை. ஆனால் இவை தனித்து வழங்கப்படுவதில்லை. உரிச் சொற்கள் செய்யுளுக்கே உரியன என்று நன்னூலார் கூறுகிறார்.

| | |
|---|---|
| கடி மலர் – மணம் மிக்க மலர்<br><br>கடி நகர் – காவல் மிக்க நகர் | ஒரு சொல் பல பொருளுக்கு உரியது |

| | |
|---|---|
| கடி விடுதும் – விரைவாக விடுவோம்<br><br>கடி நுனி – கூர்மையான நுனி | |
| உறு, தவ, நனி என்ற மூன்று உரிச்சொற்களும் மிகுதி என்னும் பொருளில் வருகின்றன.<br><br>உறு பசி; தவச் சிறிது; நனி நன்று | பல சொல் ஒரு பொருள் |

உரிச்சொற்கள், பெயரையும் வினையையும் சார்ந்து அவற்றிற்கு முன்னால் வந்து பொருள் உணர்த்துகின்றன. மேலும் அவை

1) ஒரு சொல் பல பொருள்களுக்கு உரியதாய் வருவதும் உண்டு
2) பல சொல் ஒரு பொருளுக்கு உரியதாய் வருவதும் உண்டு

மழ, குழ என்பவற்றிலிருந்து உருவானவை மழலை, குழந்தை போன்ற சொற்கள். உவப்பு (உவகை), பசப்பு (நிறம் மங்குதல்), பயப்பு (பயன்) போன்றவை அப்படியே பயன்படுகின்றன. செழுமை என்பது செழிப்பு, செழித்த, செழிக்கும் எனப் பெயராகவும், வினையாகவும் பயன்படுகிறது. விழுமம் என்பது விழுப்பம், விழுமுதல், விழுமிய எனப் பெயராகவும் வினையாகவும் பயன்படுகிறது. பிற உரிச் சொற்களும் அவ்வாறே தற்காலத்தில் பயன்படுகின்றன.

| |
|---|
| அன்று என்பது ஒருமைக்கும்<br><br>அல்ல என்பது பன்மைக்கும் உரியன.<br><br>(எ.கா.) இது பழம் அன்று.<br><br>இவை பழங்கள் அல்ல. |

| |
|---|
| எத்தனை என்பது எண்ணிக்கையைக் குறிக்கும் |
| எத்துணை என்பது அளவையும் காலத்தையும் குறிக்கும் |
| (எ.கா.) எத்தனை நூல்கள் வேண்டும்? |
| எத்துணை பெரிய மரம், எத்துணை ஆண்டு பழைமையானது. |

**ஆகுபெயர்**

'கலாம் சாட் கண்டுபிடித்த பள்ளி மாணவனை ஊரே பாராட்டியது.'

'பெண்களைக் கேலி செய்த இளைஞரை ஊரே இகழ்ந்தது.'

இத்தொடர்களில் ஊர் பாராட்டுவதோ, திட்டுவதோ இல்லை. மாறாக, அவ்வூரில் உள்ள மக்கள் பாராட்டினர் / இகழ்ந்தனர் என்பது இதன் பொருள். ஊர் என்னும் பெயர், ஊரில் உள்ள மக்களுக்கு ஆகிவந்தது. இதனை இடவாகுபெயர் என்பர்.

ஒன்றின் இயற்பெயர், அதனோடு தொடர்புடைய மற்றொன்றிற்குத் தொன்றுதொட்டு ஆகி வருவது ஆகுபெயர் எனப்படும். ஆகுபெயர்கள் பதினாறாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றுள் குறிப்பிடத்தக்கவை சில –

| | |
|---|---|
| முல்லையைத் தொடுத்தாள் | பொருளாகு பெயர் (முதலாகு பெயர்) – முதற்பொருளாகிய முல்லைக்கொடி, அதன் சினை (உறுப்பு)யாகிய பூவுக்கு ஆகி வந்தது. |
| வகுப்பறை சிரித்தது | இடவாகு பெயர் – வகுப்பறை என்னும் இடப்பெயர் அங்குள்ள மாணவர்களுக்கு ஆகி வந்தது. |
| கார் அறுத்தான் | காலவாகுபெயர் - கார் என்னும் காலப்பெயர் அக்காலத்தில் விளையும் பயிருக்கு ஆகி வந்தது. |

| | |
|---|---|
| மருக்கொழுந்து நட்டான் | சினையாகுபெயர் – மருக்கொழுந்து என்னும் சினைப் (உறுப்பு) பெயர், அதன் செடிக்கு ஆகிவந்தது. |
| மஞ்சள் பூசினாள் | பண்பாகுபெயர் – மஞ்சள் என்னும் பண்பு, அவ்வண்ணத்தில் உள்ள கிழங்குக்கு ஆகிவந்தது. |
| வற்றல் தின்றான் | தொழிலாகு பெயர் – வற்றல் என்னும் தொழிற்பெயர் வற்றிய உணவுப்பொருளுக்கு ஆகி வந்தது. |
| வானொலி கட்டு மகிழ்ந்தனர் | கருவியாகுபெயர் – வானொலி என்னும் கருவி, அதன் காரியமாகிய நிகழ்ச்சிகளுக்கு ஆகி வந்தது. |
| பங்கூழ் வளர்ந்தது | காரியவாகுபெயர் – கூழ் என்னும் காரியம் அதன் கருவியாகிய பயிருக்கு ஆகி வந்தது. |
| அறிஞர் அண்ணாவப் படித்திருக்கிறேன் | கருத்தாவாகுபெயர் – அறிஞர் அண்ணா என்னும் கருத்தாவின் பெயர், அவர் இயற்றிய நூல்களுக்கு ஆகி வருகிறது. |
| ஒன்று பெற்றால் ஒளிமயம் | எண்ணலளவை ஆகுபெயர் – ஒன்று என்னும் எண்ணுப் பெயர், அவ்வெண்ணுக்குத் தொடர்புடைய குழந்தைக்கு ஆகி வந்தது. |
| இரண்டு கிலோ கொடு | எடுத்தலளவை ஆகு பெயர் – நிறுத்தி அளக்கும் எடுத்தல் என்னும் அளவை பெயர், அவ்வளவையுள்ள பொருளுக்கு ஆகி வந்தது. |

| | |
|---|---|
| அரை லிட்டர் வாங்கு | முகத்தலளவை ஆகுபெயர் – முகந்து அளக்கும் முகத்தல் அளவை பெயர், அவ்வளவையுள்ள பொருளுக்கு ஆகி வந்தது. |
| ஐந்து மீட்டர் வெட்டினான் | நீட்டலளவை ஆகுபெயர் – நீட்டி அளக்கும் நீட்டலளவைப் பெயர், அவ்வளவையுள்ள பொருளுக்கு ஆகி வந்தது. |

**பெயர்ச்சொல்**

மரம், பள்ளிக்கூடம், சித்திரை, கிளை, இனிப்பு, பாடுதல் ஆகிய சொற்களைக் கவனியுங்கள். இவை அனைத்தும் பெயரைக் குறிக்கின்றன. இவ்வாறு ஒன்றன் பெயரைக் குறிக்கும் சொல் பெயர்ச்சொல் எனப்படும். பெயர்ச்சொல் ஆறு வகைப்படும். அவையாவன

1. பொருட்பெயர்
2. இடப்பெயர்
3. காலப்பெயர்
4. சினைப்பெயர்
5. பண்புப்பெயர்
6. தொழிற்பெயர்

**பொருட்பெயர்**

பொருளைக் குறிக்கும் பெயர் பொருட்பெயர் எனப்படும். இஃது உயிருள்ள பொருள்களையும் உயிரற்ற பொருள்களையும் குறிக்கும்.

(எ.கா.) மரம், செடி, மயில், பறவை, புத்தகம், நாற்காலி.

**இடப்பெயர்**

ஓர் இடத்தின் பெயரைக் குறிக்கும் பெயர் இடப்பெயர் எனப்படும்.

(எ.கா.) சென்னை, பள்ளி, பூங்கா, தெரு.

**காலப்பெயர்**

காலத்தைக் குறிக்கும் பெயர் காலப்பெயர் எனப்படும்.

(எ.கா.) நிமிடம், நாள், வாரம், சித்திரை, ஆண்டு.

**சினைப்பெயர்**

பொருளின் உறுப்பைக் குறிக்கும் பெயர் சினைப்பெயர் எனப்படும்.

(எ.கா.) கண், கை, இலை, கிளை.

**பண்புப்பெயர்**

பொருளின் பண்பைக் குறிக்கும் பெயர் பண்புப்பெயர் எனப்படும்.

(எ.கா.) வட்டம், சதுரம், செம்மை, நன்மை.

**தொழிற்பெயர்**

தொழிலைக் குறிக்கும் பெயர் தொழிற்பெயர் எனப்படும்.

(எ.கா.) படித்தல், ஆடுதல், நடித்தல்.

அறுவகைப் பெயர்ச்சொற்களுக்கான சான்றுகளை தொடரில் அமைத்து எழுதுவோம்.

காவியா புத்தகம் படித்தாள் – பொருட்பெயர்

காவியா பள்ளிக்குச் சென்றாள் – இடப்பெயர்

காவியா மாலையில் விளையாடினாள் – காலப்பெயர்

காவியா தலை அசைத்தாள் – சினைப்பெயர்

காவியா இனிமையாகப் பேசுவாள் – பண்புப்பெயர்

காவியாவுக்கு நடனம் ஆடுதல் பிடிக்கும் – தொழிற்பெயர்

**இடுகுறிப்பெயர், காரணப்பெயர்**

நம் முன்னோர் பெயர்ச்சொற்களை அவை வழங்கும் அடிப்படையில் இடுகுறிப்பெயர், காரணப்பெயர் என இருவகைப்படுத்தினர்.

**இடுகுறிப்பெயர்**

நம் முன்னோர் சில பொருள்களுக்குக் காரணம் கருதாமல் பெயரிட்டு வழங்கினர். அவ்வாறு இட்டு வழங்கிய பெயர்கள் இடுகுறிப்பெயர்கள் ஆகும்.

(எ.கா.) மண், மரம், காற்று

இடுகுறிப் பொதுப்பெயர், இடுகுறிச் சிறப்புப்பெயர் என இடுகுறிப்பெயர் இரண்டு வகைப்படும்.

**இடுகுறிப் பொதுப்பெயர்**

ஓர் இடுகுறிப்பெயர் அத்தன்மை உடைய எல்லாப் பொருள்களையும் பொதுவாகக் குறிப்பது இடுகுறிப் பொதுப்பெயர் எனப்படும். (எ.கா.) மரம், காடு.

**இடுகுறிச் சிறப்புப்பெயர்**

ஓர் இடுகுறிப்பெயர் குறிப்பாக ஒரு பொருளை மட்டும் குறிப்பது இடுகுறிச் சிறப்புப்பெயர் எனப்படும். (எ.கா.) மா, கருவேலங்காடு.

**காரணப்பெயர்**

நம் முன்னோர் சில பொருள்களுக்குக் காரணம் கருதிப் பெயரிட்டனர். இவ்வாறு காரணத்தோடு ஒரு பொருளுக்கு வழங்கும் பெயர் காரணப்பெயர் எனப்படும். (எ.கா.) நாற்காலி, கரும்பலகை

காரணப் பொதுப்பெயர், காரணச் சிறப்புப்பெயர் எனக் காரணப் பெயர் இரு வகைப்படும்.

**காரணப் பொதுப்பெயர்**

காரணப்பெயர் குறிப்பிட்ட காரணமுடைய எல்லாப் பொருள்களையும் பொதுவாகக் குறித்தால் அது, காரணப்பொதுப்பெயர் எனப்படும். (எ.கா.) பறவை, அணி

**காரணச் சிறப்புப்பெயர்**

குறிப்பிட்ட காரணமுடைய எல்லாப் பொருள்களுள் ஒன்றை மட்டும் சிறப்பாகக் குறிப்பது காரணச்சிறப்புப்பெயர் ஆகும். (எ.கா.) வளையல், மரங்கொத்தி